<u>DEPOSITON OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

Calender }
Miscellaneous }
Preliminary Register }
Sessions } Case No.SC.171/2019

Deposition of Witness { PW.19
{ Prosecution
{

Name : பலராமன்
Father's Name :---
Taluk :---
Calling :---
Religion :---
Age :---

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.06.2025.

2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.19 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

6, 12, 14 மற்றும் 22 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் சேலத்தில் வசிக்கிறேன். நான் சார்பதிவாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நான் சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி சார்பதிவாளராக பணியாற்றி வந்த போது நான் என்னுடைய அன்றாட வேலைகளை அன்றைய தினமே முடித்த பின்பு தான் வீட்டிற்கு செல்வேன். என் குடியிருப்பு அருகிலேயே இருந்ததால் சில நேரங்களில்

10.00 மணி வரை அலுவலகத்தில் இருந்து அலுவல் வேலைகளை பார்ப்பது வழக்கம். இந்நிலையில் கடந்த 05.09.2007 ம் தேதி இரவு 09.00 மணிக்கு நான் வழக்கம் போல் அலுவலகத்தில் இருந்த போது 1 ம் எதிரியும் அவருடன் சிலரும் அலுவலகத்திற்கு வந்து ஒரு ஆவணம் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு நான் ஆவண பதிவு நேரம் முடிந்துவிட்டது என்று சொன்னேன். அதற்கு அவர்கள் ஆவணத்தை உடனே பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் கொலை செய்து விடுவோம் என்று என்னை மிரட்டினார்கள். நான் பத்திரம் பதிவு செய்ய முடியாது என்று சொன்னதற்கு எதிரிகள் என்னை மீண்டும் மிரட்டியதால் அவர்கள் அரசியல்வாதிகள் என்பதால் நான் பயந்து கொண்டு நான் அவர்களுடன் சென்றேன். 1 ம் எதிரியும் மற்றும் சிலரும் என்னை அழைத்து சென்றார்கள். 1 ம் எதிரியை தவிர மற்றவர்களை எனக்கு தற்போது அடையாளம் தெரியவில்லை. 1 ம் எதிரியும் அவருடன் வந்தவர்களும் என்னை அருகிலிருந்த ஒரு ஈஸ்வரன் கோவிலுக்கு அழைத்து சென்றார்கள். நான் செல்லும் போது அலுவலகத்திருந்த ரேகை பதிவேட்டை மட்டும் எடுத்து சென்றேன். நான் அங்கு சென்ற போது நேரம் இரவு சுமார் 09.30 மணி இருக்கும். அங்கு சடையன், அவரது மகன்கள், மருமகள்கள் உட்பட சுமார் 5 அல்லது 6 பேர் இருந்தார்கள். அவர்களை எதிரிகள் தான் எனக்கு அடையாளம் காட்டி இவர்களிடம் தான் கையெழுத்து வாங்க வேண்டும் என்று சொன்னார்கள். 2 அல்லது 3 ஆவணங்களில் அங்கிருந்தவர்களிடம் எதிரிகள் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். ரேகை பதிவேட்டில் மட்டும் என்னை ரேகை வாங்க சொன்னார்கள். நானும் ரேகை வாங்கி கொண்டேன். பின்பு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நானும் அலுவலகம் சென்றுவிட்டேன். மறுநாள் காலை 11.00 மணிக்கு 1 ம் எதிரியும் அவருடன் வந்தவர்களும் மீண்டும் அலுவலகத்திற்கு வந்தார்கள். அவர்கள் என்னிடம் ஏற்கனவே கையெழுத்து வாங்கிய ஆவணங்களுக்கு பதிவு எண் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த தானசெட்டில்மெண்ட் இரத்து பத்திரம் மற்றும் ஒரு கிரைய ஆவணம் ஆகியவற்றிற்கு நான் பதிவு எண் கொடுத்தேன். இரத்து பத்திரத்தின் பதிவு எண்.2891/2007. கிரைய பத்திரத்தின்

பதிவு எண்.2892/2007. அந்த ஆவணங்களை எழுதி கொடுத்தவர்களின் பெயர் தற்போது எனக்கு நினைவில்லை. அந்த ஆவணங்கள் அ.சா.ஆ.2 (4 மற்றும் 5) தான். பின்பு சுமார் 15 நாட்கள் கழித்து அதே சொத்தை பொறுத்து மீண்டும் ஒரு கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்று என்னிடம் வந்து கேட்டார்கள். நானும் அவர்கள் கேட்டது போல் பதிவு செய்து கொடுத்தேன். அந்த ஆவணம் அ.சா.ஆ.2 (8) தான். பின்பு 2013ம் ஆண்டில் ஒரு நாள் போலீசார் வந்து என்னை விசாரித்த போது மேற்படி ஆவணங்களை எதிரிகள் மிரட்டி எழுதி வாங்கி கொண்டதாக தெரிந்து கொண்டேன். நான் பதிவு செய்து கொடுத்த ஆவணங்களை என்னிடம் காட்டி விசாரித்த போது நான் மேற்கூறிய விவரங்களை போலீசாரிடம் சொன்னேன்.

குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-பலராமன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.